அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 248/2015
தேதி. 09.10.2015

# தண்டனை பெற வேண்டியவர்களுக்கு பாராட்டு பதக்கமா? இலங்கை அரசைக் கண்டித்து ச.ம.க. தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் நடத்தியது இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் என்று ஐநா மனித உரிமை கவுன்சில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதன் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பித்து சர்வதேச விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

சர்வதேச விசாரணை நடந்துவிட்டால் தனது குற்றங்கள் அனைத்தும் வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் அமெரிக்க ஆதரவுடன் உள்நாட்டு விசாரணையே போதும் என்ற வாதத்தை இலங்கை அரசு முன்வைத்து சர்வதேச விசாரணைக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

இந்நிலையில் 11/2 லட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை உள்நாட்டுப் போரில் பணியாற்றிய ராணுவத்தினரை இலங்கை அதிபர் கௌரவித்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. இலங்கை ராணுவம் புரிந்தது போர்க்குற்றம் என்றால், அந்நாட்டு ராணுவத்தினரும் போர்க்குற்றவாளிகள் தாம் என்று பொருள். அத்தகைய குற்றங்களுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள், தண்டனை பெற வேண்டியவர்களை அழைத்து பாராட்டும் விதமாக இலங்கை அரசு நடந்திருப்பது கண்டனத்திற்கு உரியது. லட்சக்கணக்கில் குடும்ப உறவுகளைப் இழந்து நிற்கும் தமிழினத்திற்கு ஆறுதலும், நிவாரணமும், சம உரிமையும் தரவேண்டிய இலங்கை அரசின் இத்தகைய செயல், ஒட்டுமொத்த தமிழினத்தின் இதயங்களில் மேலும் காயங்களை ஏற்படுத்தி அதில் வேல் பாய்ச்சுவதாக அமைந்துள்ளது. தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் கொடுங்கோன்மை தொடர்ந்து கொண்டே இருக்கிறது என்பதும் இந்நிகழ்ச்சியின் வெளிப்பாடு.

ராணுவத்தினரைக் கௌரவித்ததன் மூலம் தமிழர் உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கும் இலங்கை அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம். மத்திய அரசும் தமிழர் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தனது கண்டனத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்க,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம் எல்.ஏ,
தலைவர்.